**காஞ்சிபுரம் (இ) ஸ்ரீபெரும்புதூர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**

பிறப்பிப்பவர் : திரு. எ. சசிகுமார், பி.டெக்.,

சுருக்கம்

பணிக்குழு – தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு – 2018–2019 மற்றும் 2019–2020 வரையிலான காலத்திற்கு தெரிவு செய்யப்பட்டு, இளநிலை உதவியாளராக பணி நியமனம் – திரு. வெ. தங்கராஜ், காஞ்சிபுரம் (இ) ஸ்ரீபெரும்புதூர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தமை – பணிவரன்முறை செய்து – ஆணை வழங்குதல்

---

அ / 1550 / 2020 நாள். 25.10.2021

படிக்கப்பட்டது

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குறிப்பாணை எண். 3406/PSD-I2/2019, நாள்: 15.02.2020
2. சென்னை–6, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண் G3/16386/2020-2 , நாள்: 29.07.2020
3. சென்னை.32, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் (பொ.) அவர்களின் செயல்முறை ஆணைகள் எண். ஒ1/12283/2020, நாள்.04.08.2020.

••••••

**ஆணை:**

மேலே 1–ல் படிக்கப்பட்ட கடிதத்தின்படி, தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, மேலே 2–ல் படிக்கப்பட்ட செயல்முறை ஆணை மூலம் இவ்வியக்ககத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, மேலே 3–ல் படிக்கப்பட்ட செயல்முறை ஆணை மூலம் இவ்வலுவலகத்தில் பணியமர்த்தப்பட்ட திரு. வெ.தங்கராஜ், இளநிலை உதவியாளரின் பணிவரன்முறையானது "The regularization is subject to the outcome of the WPs pending on the files of Hon'ble High court of Madras/Madurai Bench of the Hon'ble High court of Madras relating to the Combined Civil Services Examination-IV Services / 2018-2019 & 2019-2020 recruitment". இவரது தெரிவு உறுதி செய்யப்பட்டது என தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தெரிவித்துள்ளதால், மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| *பெயர் மற்றும் பதவி* | *பணியில் சேர்ந்த நாள்* | *பணிவரன்முறை செய்யப்படும் நாள்* |
|---|---|---|
| திரு. வெ. தங்கராஜ், இளநிலை உதவியாளர் | 17.08.2020 மு.ப. | 17.08.2020 மு.ப. |

மேற்கண்ட பணியாளர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016–ன் பிரிவு 28 (1)–ன் படியும், தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் சிறப்பு விதிகளின் கீழான விதி 32–ன் படியும் அவர் பணியில் சேர்ந்த நாள் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் தொடர்ச்சியான மூன்று ஆண்டுகள் பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது. இத்தகுதிகாண் பருவத்தில் அரசாணை எண்.130, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத்துறை, நாள்.22.07.2008–ல் தெரிவிக்கப்பட்டவாறு தனியர் பணிநியமனம் பெற்ற நாளிலிருந்து இரண்டு வருடங்களுக்குள், தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும், பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி தேர்வில் தேர்வு பெற்றாலும் மட்டுமே தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்ய இயலும் என்பதால் இவர் அத்தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் உத்தரவிடப்படுகிறது.

25/10/2021

துணை இயக்குநர்,
தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்–I,
காஞ்சிபுரம் (இ) ஸ்ரீபெரும்புதூர்.

பெறுநர்
திரு.வெ.தங்கராஜ்,
இளநிலை உதவியாளர்,
இவ்வலுவலகம்.

25/10/2021

நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

1. முதன்மை செயலாளர் / தொழிலாளர் ஆணையர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, சென்னை–6.
2. இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், கிண்டி, சென்னை–32.
3. கூடுதல் இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், கிண்டி, சென்னை–32.
4. இணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், காஞ்சிபுரம் (இ) சென்னை–32.